**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.135 /2022**
**Deposition of witness of Defendant – D.W.1(வீரையா)**
**02.4.2024**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் 9 வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். தாவா புல எண்கள் 93/1A மற்றும் 93/1C ஆகியவற்றிக்கு பழைய புலஎண் 93/1 என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தெரிந்துகொண்டு அவற்றை படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். தாவா சொத்துக்கள் ஆதியில் காதர்மைதீன் என்பவரின் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் கா. சேக் முகமது என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். சேக் முகமதுவின் அப்பா பெயர் என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1ல் கண்ட சொத்திற்கு தான் நான் கட்சி செய்கிறேன் என்றால் புலஎண்கள் 93/1A மற்றும் 93/1C ஆகியவற்றிக்கு கட்சி செய்கிறேன். 93/1A மற்றும் 93/1C ஆகியவை ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கா.சேக்முகமதுவிற்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்து கா.சேக்முகமதுவால் கிரையம் வாங்கப்பட்ட சொத்தா என்றால் பூர்வீக சொத்து ஆகும். கா.சேக்முகமதுவிற்கு முன்பு அந்த சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் ஆதியில் சைதா முகமது ராவுத்தர் மகன்கள் காதர்மைதீன் ராவுத்தர் 1, பீர்கனி ராவுத்தர் 2, முகமது மீரா ராவுத்தர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் கட்சி செய்யும் சொத்தின் நான்கெல்லை வடபுறம் புலஎண் 93/1B தென்புறம் கிருஷ்ணண் ஆசாரி , பழனியான்டி, வெள்ளக்கன்னு . கிழக்கு புல எண் 352, மேற்கு என்னுடைய சொத்து . மேற்கண்ட நான்கெல்லைக்குள் 2 உட்பிரிவுகள் உள்ளதா அல்லது 1 உட்பிரிவு உள்ளதா என்றால் 1 உட்பிரிவில் உள்ள சொத்து தான். புலஎண் 93/1A க்கு தனியாக நான்கெல்லை உள்ளது. உட்பிரிவிற்கு முன்பு இருந்த நான்கெல்லை தெரியுமா என்றால் வடபுறம் புலஎண் 91, மேல்புறம் புலஎண்கள் 87,88 கீழ் புறம் 352, தென்புறம் 93/2,3A,3B,3C,3D,3E ஆகும். மேற்கண்ட நான்கெல்லையில் ரெங்கசாமி உத்தமுன்டாருக்கு இடம் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி நான்கெல்லையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் யார் பெயரில் உள்ளது என்றால் வடபுறமும் மேல்புறமும் தவிர இதர சர்வே எண்கள் யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. நான் கிரையம் வாங்கும் போது தாவா இடத்தை நிலஅளவையர் உதவியுடன் அளவை செய்து கிரையம் வாங்கினேனா என்றால்

அவ்வாறு தான் கிரையம் வாங்கினேன். அவ்வாறு கிரையம் வாங்கும்போது நான்கெல்லையில் யார் உள்ளார்கள் என்று தெரிந்து கிரையம் வாங்கினேனா என்றால் 2016 கிரைய பத்திரத்தில் நான்கெல்லை எழுதவில்லை. 2012 ம் வருட தமிழக அரசின் பதிவு திருத்தச்சட்டத்தின் படி கிரையப்பத்திரங்களில் நான்கெல்லை குறிப்பிட்டு எழுதவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் மோசடி பத்திரம் என்பதால் தான் நான்கெல்லை குறிப்பிடாமல் சர்வே எண் மட்டும் குறிப்பிட்டு கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)**